***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***

***STC.No. 66/2024 – P.W. 5 ( LW -8)***

| | |
|---|---|
| *Name* | ஜெயந்தி காவல் ஆய்வாளர்<br>திருவாரூர் தாலுக்கா காவல் நிலையம் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *47* |

*எதிரி ஆஜர்.*

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 07.07.2026*

*அரசு தரப்பில் முதல் விசாரணை*

1. நான் தற்போது திருவாரூர் தாலுக்கா காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன்.

கடந்த 25.03.2018 ஆம் தேதி வடுவூர் காவல்நிலைய ஆய்வாளராக நிலையப் பொறுப்பில் இருந்தபோது மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சென்னை , எம்.ஜி. ஆர் நகரை சேர்ந்த தங்கையா மகன் காந்தி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து நிலைய மனு எண். 62/2018 பதிவு செய்யப்பட்டதை மனு விசாரணைக்குப்பின் நிலையக்குற்ற எண். 44/2018 ச/பி. 323, 506(1)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் அன்றைய தினமே 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சரவணன் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம்

தயார் செய்தேன். (**பார்வை மகசர் மற்றும் வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரித்தவகையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் நிலையம் ஆஜரான எதிரிகளை குற்றக்காரணம் கூறி கைது செய்து நிலையப்பிணையில் விடுவித்தேன்

இச்சம்பவத்தில் காயமடைந்த வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் விஷ்ணு என்பவரை விசாரித்து விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று தாக்கல் செய்தேன். இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரிகளின் செய்கையானது 323, 506(1)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 03.04.2018 ம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது ஆவணங்கள் படி என்னிடம் புகார் சமர்பிக்கப்பட்ட தேதி 10.03.2018 ம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ப்பட்ட தேதி 25.03.2018 ம் தேதி என்று சொன்னால் சரிதான். கால தாமதத்திற்கு என்ன காரணம் என்றால் புகார் மனு பதிவு செய்யப்பட்டு மனு விசாரணைக்கு பின் பதிவு செய்யப்பட்டது. 52/2018 என்ற குற்ற எண்ணில் இவ்வழக்கின் புகார்தாரர் காந்தி, அவரது சகோதரர் ராமதாஸ் மற்றும் 2 நபர்கள் மொத்தம் நான்கு நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இவ்வழக்கில் நான் விசாரணை செய்த சாட்சிகள் லோகநாதன் அசா.1 டம் வேலை செய்தவர் என்றும், ராமதாஸ் என்பவர் அசா.1 ன் உடன் பிறந்த சகோதரர் என்றும், அம்பலவாணன் அவரது மருமகன் என்று சொன்னால் சரிதான். ஏற்கெனவே இவ்வழக்கின் எதிரிக்களுக்கும், புகார்தாரருக்கும் இடையே சொத்து தொடர்பாக வழ்கது நடந்து வருகிறது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணத்தின் படி 2018 ம் ஆண்டின் படி புகார்தாரருக்கு வயது 80 என்று சொன்னால் சரிதான். எங்களது ஆவணப்படி சம்பவ நேரம் மதியம் 02.30 மணி என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் 52 ஆண்டுகளுக்கு மேலாக சென்னையில் நிரந்தர முகவரியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

உண்மையில் அவர் அன்றையதினம் வயலில் வேலை செய்யவில்லை என்றும், சென்னையில் இருந்த புகார்தாரரின் உறவினரான காவல் துறையில் உயர்அதிகாரியாக பணிபுரியும் நபரின் அறிவுறுத்தலின் பேரில் இவ்வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும், உரிமையியல் வழக்கில் எதிரிகளை அச்சுறுத்த

வேண்டும் என்பதற்காக அசா.1 ல் ஜோடிக்கப்பட்ட பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் கொடுத்த புகாரில் எதிரிகள் இருவரும் கட்டையால் அடித்ததாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அது குறித்து கட்டையை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். வயலில் விவசாயம் பணி நடக்கும் போது தா்ன சம்பவம் என்பதால் விவசாய பணி நடக்கும் போது யார் யார் வயலில் வேலை செய்தது என்று விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். உண்மையில் நான் விசாரணை செய்யவில்லை என்றும், அவ்வாறு சம்பவம் நடைபெறும் போது சாட்சிகளை விசாரித்திருந்தால் அவர்களை கண்ணுற்ற சாட்சிகளாக விசாரித்திருப்பேன் என்றால் சரியல்ல. உண்மையில் புகார்தாரர் தரப்பினர் எதிரிகள் நிலத்தில அத்துமீறி நுழைந்து அவர்களது பம்பு செட் மற்றும் சொத்துக்களை அழிம்பு செய்தார்கள் என்றும், அதனால் அசா.1 க்கு ஆதரவாக நடைபெறாத சம்பவத்தை முதியவர் என்பதால் கொடுத்த வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசா.1 க்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi